# முதல் இடைப்பருவத் தேர்வு - 2021

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

*நேரம்: 1.30 மணி* **கணக்குப்பதிவியல்** *மதிப்பெண்கள்: 50*

பிரிவு - I

குறிப்பு : **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**I. சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்:** **10×1=10**

1. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்த கடனாளிகள் கணக்கு ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு
2. கடனாளிகள் தொடக்க இருப்பு : ₹ 30,000, பெற்ற ரொக்கம் : ₹ 1,00,000, கடன் விற்பனை : ₹ 90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
   அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹ 20,000
3. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

| *வ.எண்* | *பட்டியல் I* | *வ.எண்* | *பட்டியல் II* |
|---|---|---|---|
| i) | மொத்த கடனாளிகள் க/கு | 1. | மாற்றுச்சீட்டு பெற்றது |
| ii) | மொத்த கடனீந்தோர் க/கு | 2. | மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது |
| iii) | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு | 3. | கடன் விற்பனை |
| iv) | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு | 4. | கடன் கொள்முதல் |

   **குறியீடு :**

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 3 | 1 | 2 |

4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
7. உயில்கொடை ஒரு
   அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு
8. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டு (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
9. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன்மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி
10. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%

பிரிவு - II

குறிப்பு : **எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 15க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **4×2=8**

11. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?

12. உயில்கொடை என்றால் என்ன?

13. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும் :
2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் ₹ 1,00,000
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹ 2,30,000
அளித்த தள்ளுபடி ₹ 5,000
உள்திருப்பம் ₹ 25,000
2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் ₹ 1,20,000

14. பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| சந்தா பெற்றது | ₹ |
|---|---|
| 2015 - 2016 - க்காக | 7,500 |
| 2016 - 2017 - க்காக | 60,000 |
| 2017 - 2018 - க்காக | 1,500 |
| | 69,000 |

2016 - 17 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா 2,400. 2016 - 2017 ஆம் ஆண்டிற்கான சந்தா 2015 - 2017 ஆம் ஆண்டில் பெற்றது 1,000.

15. அந்தோணி மற்றும் அக்பர் என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் அந்தோணி ₹ 60,000 மற்றும் அக்பர் ₹ 40,000 ஆகும். 2018, ஏப்ரல் 1 அன்று அந்தோணி கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் அக்பர் ₹ 5,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிடவும்.

## பிரிவு - III

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 20க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **4×3=12**

16. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை? (ஏதேனும் 3)

17. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

18. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் சந்தா எவ்வாறு தோன்றும் என்பதைக் காட்டவும்.
2018 ல் பெற்ற சந்தா ₹ 16,000 ல் 2017 ஆம் ஆண்டிற்கான 3,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ₹ 5,000 அடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ₹ 4,000. 2017 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது ₹ 2,000.

19. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 40,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 40,000 |
| 2018, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| 2018, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

20. அருண் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்க வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு.

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜூன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

எடுப்புகள் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

## பிரிவு - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 4×5=20

21. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

(OR)

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018, ஜனவரி 1 அன்று செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்-துதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

22. அ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

(OR)

ஆ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக் கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டிகள் வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

23. அ) காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

**(OR)**

ஆ) பின்வரும் விவரங்கள் ஒரு விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (1.4.2018) | 3,000 |
| நடப்பாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 9,000 |
| நடப்பாண்டில் விற்பனை செய்த பழைய விளையாட்டுப் பொருள்கள் | 500 |
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (31.3.2019) | 4,000 |

24. அ) தங்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வரும் சுபா மற்றும் சுதா என்ற கூட்டாளிகளின் பின்வரும் இருப்புநிலைக்குறிப்பிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | நிலைச் சொத்துகள் | 30,000 |
| சுபா | 15,000 | நடப்புச் சொத்துகள் | 20,000 |
| சுதா | 20,000 | | |
| நடப்புப்பொறுப்புகள் | 15,000 | | |
| | 50,000 | | 50,000 |

அவ்வாண்டில் சுபா மற்றும் சுதாவின் எடுப்புகள் முறையே ₹ 2,500 மற்றும் ₹ 3,500. அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹ 15,000.

**(OR)**

ஆ) அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்க வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு.

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜூன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

--------